## சமஸ்த லங்கா சாசனாரக்சக சபை நிதியம் - 2015

சமஸ்த லங்கா சாசனாரக்சக சபை நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, நிதிய மாற்றல் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய சட்டத்தின் 10(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கடப்பாடுகள் என்பவற்றிக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சருவதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்வதன் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகை, வருமான செலவினக் கணக்கு ஆகியவற்றில் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் அத்துடன் மூலாதாரங்களுக்கு ஏற்புடைய ஏதேனும் செம்மையாக்கல் அவசியமானவையாக காணப்படுகின்றதா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

### 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க, இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

(அ) 2015 அறநெறிய பாடசாலைகள் கொடி விற்பனை அறிக்கை பிரகாரம் ரூபா 12,492,750 பெறுமதியான 499,710 கொடிகள் 21 மாவட்டங்களிலுள்ள 319 பிராந்திய சாசனாரக்சக சபைகளுக்கு இடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், அச்சிடப்பட்ட கொடிகளின் எண்ணிக்கை, விற்கப்படாது எஞ்சிய கொடிகளின்

எண்ணிக்கை மற்றும் குறித்த எஞ்சிய கொடிகளின் எண்ணிக்கை காணப்படும் இடம் அல்லது உறுதிப்படுத்திக் கொள்வதற்கான எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் மொத்த வருமானத்தில் 92 சதவீத அளவிலான ரூபா 11,981,679 கொடி விற்பனை வருமானத்தை கணக்காய்வின் போது சான்றுறுதிப்படுத்தவோ அல்லது மெய்மையாய்வு செய்யவோ முடியாதிருந்தமையினால் வருமானத்தின் சரியானத்தன்மை மற்றும் பூரணத்துவம் தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 495,000 கூட்டுத்தொகையான மருத்துவ உதவிகள் உரிய நலனாளிகளுக்கு கிடைத்ததாக உறுதிபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

(அ) மீளாய்வாண்டின் போது சமஸ்த லங்கா சாசனாரக்சக சபையின் சேமிப்புக் கணக்கிலிருந்து நடைமுறைக் கணக்கிற்கு ரூபா 11,143,068 தொகை மாற்றப்பட்டிருந்தது. எனினும், பேரேட்டுக் கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெறுவனவு மற்றும் கொடுப்பனவு கணக்கின் பிரகாரம் நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த அளவு ரூபா 10,685,171 ஆக இருந்தமையால் ரூபா 457,897 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) காசேட்டிற்கு மாதிரியாக சமர்ப்பிக்கப்பட்ட பதிவேட்டின் பிரகாரம் வருடாந்த கொடி விற்பனை வருமானம் ரூபா 12,381,181 ஆக இருந்தது. எனினும், வருமானச் செலவினக் கணக்கில் அவ்வருமானம் ரூபா 11,981,679 ஆக இருந்தமையால் ரூபா 399,502 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(இ) நிதியத்தின் நடைமுறைக் கணக்கின் பிரகாரம் 2015 சனவரி 01 இல் உள்ளவாறு முன்கொண்டு வரப்பட்ட மீதி உட்பட மொத்த பெறுவனவு 10,878,273 ஆக இருந்ததுடன், ஆண்டினுள் காசோலை மூலம் மேற்கொண்ட கொடுப்பனவுகள் ரூபா 11,068,488 ஆக இருந்தது. இதன் பிரகாரம், ரூபா 190,215 ஆன மேலதிகப் பற்றொன்று காணப்பட வேண்டிய போதிலும், ஐந்தொகையில் வங்கி மீதியாக ரூபா 203,785 ஆன மிகையொன்று காட்டப்பட்டிருந்தது. நிதியத்தினால் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்படாமையால் ரூபா 394,000 தொகையான வேறுபாட்டிற்கு காரணங்களை தெளிவு படுத்த முடியாதிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இனங்காமை**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடன் இனங்காமைகள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 395(ஈ) | வங்கிக் கணக்கொன்றினை கொண்டுள்ள ஒவ்வொரு நிறுவனத்தினாலும் ஒவ்வொரு மாத இறுதியின் போது உள்ள கொடுக்கல் வாங்கல் நிலைமை தொடர்பாக அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக் கூற்றொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் வங்கி நடைமுறைக் கணக்கிற்கு உரிய 2014 ஏப்ரல் முதல் இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2005 திசெம்பர் 19 ஆம் திகதிய பீஈடி 33 இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை | சகல அரச நிறுவனங்களின் முதலீடு அரச வங்கிகளில் மாத்திரம் மேற்கொள்ள வேண்டிய போதிலும், நிதியத்தினால் ரூபா 5,495,000 தொகை தனியார் வங்கியொன்றில் நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்திருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் மிகை ரூபா 1,541,721 ஆக இருந்துடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,158,685 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 383,036 ஆன அதாவது 33 சதவீதமான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. சிசுசவிய புலமைப் பரிசில் உதவிச் செலவினம் ரூபா 4,033,000 ஆல் அதிகரித்த போதிலும் கொடி விற்பனை வருமானம் ரூபா 5,885,669 ஆல் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அறநெறிப் பாடசாலைகளில் சேவைக்காலத்தை 50 ஆண்டு பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்காக மாதமொன்றுக்கு கொடுப்பனவு செய்யப்படும் ரூபா 1,000 ஆன படி 2015 ஆம் ஆண்டிற்குரித்தாக கொடுப்பனவு 2016 ஆகஸ்ட் மாதத்திலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வருடத்திற்குரிய கொடுப்பனவினை அவ்வாண்டிலேயே கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

நிதிக்கூற்றுக்களில் ரூபா 11,981,679 ஆன கொடி விற்பனை வருமானமாக வங்கி சேமிப்புக் கணக்கிற்கு 2015 ஆம் ஆண்டில் சனவரி 02 ஆந் திகதி முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலவு வைக்கப்பட்ட பணத்தின் அளவாக இருந்தது. எனினும், 2015 ஆம் ஆண்டிற்கான கொடி அச்சிடல் 2015 செப்தெம்பர் மாதத்தின் போது அச்சிடப்பட்டிருந்தமையால் 2015 செப்தெம்பர் மாதத்திற்கு முன்னர் வைப்புச் செய்யப்பட்ட பணம் 2014 ஆம் ஆண்டில் கொடி விற்பனை மூலம் கிடைத்த வருமானம் என அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் நிதியத்திடம் வருடாந்த கொடி விற்பனை வருமானத்தை சரியாக கணிப்பிடக்கூடிய முறையொன்று இல்லையென அவதானிக்கப்பட்டது. அவ்வாறே சேகரிக்கப்படும் பணம் முறையற்ற பாவனைக்கு இடமளிக்கப்படல் மற்றும் சரியாக கணக்கீடு செய்யப்படாமை போன்ற ஆபத்துக்கள் காணப்படுவதும் அவதானிக்கப்பட்டன.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2017 சனவரி மாதத்திலேயே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 5.2 செயல்நடவடிக்கை திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சமஸ்த லங்கா சாசனாரக்சக சபை சட்டத்தின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைவதற்கு ஏற்ற விதத்தில் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதி ஒழுங்குவிதி 133(ஆ) மற்றும் 2009 யூன் 09ஆம் திகதிய DMA/2009(1) கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டினுள் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) நிதியத்தினால் அச்சிடப்பட்டு விற்கப்பட்ட கொடிகளின் வருமானம் மற்றும் செலவுகளை தெளிவாக இனங்காணும் விதத்தில் கணக்குகள் பேணப்படாமை. |
| | (ii) பேரேடு கணக்குகள் தெளிவாகவும் சரியாகவும் முறையாகவும் பேணிச் செல்லாமை. |
| | (iii) நடைமுறைக் கணக்கிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் பொருட்டு காசேடொன்றை பயன்படுத்தாமை மற்றும் முறையாக உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்படாமை. |
| | (iv) பெறப்பட்ட வருமானத்திற்கான பொருட் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படாமை. |
| (ஆ) கொடி அச்சிடலும் விற்பனையும் | அச்சிடப்பட்ட கொடிகள் பொருட்டு தொடர் இலக்கம் இடாமை அத்துடன் விற்கப்படாத எஞ்சிய கொடிகளை மீளப் பெறுதல் மற்றும் அறிக்கை இடுதல், கிடைத்த மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம் சரியாக கணக்கீடு செய்வதற்காக நடைமுறையொன்று இல்லாமை |